2015 செப்டம்பர் 15]

264—

பகுதி நேர நியாய விலைக் கடை

***55318—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், பன்னிக்குண்டு நியாய விலைக் கடையைப் பிரித்து நக்கலக்கோட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, பன்னிக்குண்டு தாய்க் கடையிலிருந்து நக்கலக்கோட்டையைச் சேர்ந்த 165 குடும்ப அட்டைகளை பிரித்துவிட்டால், தாய்க் கடையில் 409 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். அரசின் விதிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில், நக்கலக்கோட்டை பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

முற்பகல் 10-45

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளெல்லாம் தமிழகத்தை உற்று நோக்கிப் பார்க்கக்கூடிய வகையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உயர்த்திக் காட்டியிருக்கின்ற தமிழகத்து மக்களுடைய அட்சய பாத்திரம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களுடைய பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமங்கலம் ஒன்றியம், பன்னிக்குண்டு கிராமத்திலிருந்து நக்கலக்கோட்டை இரண்டரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 499 குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்போதுகூட அந்த ஊரிலிருந்து 16 குடும்பங்கள் குடும்ப அட்டைகள் வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே, பன்னிக்குண்டிலிருந்து அட்டைகளைப் பிரித்து நக்கலக்கோட்டையில் இந்த ஆண்டே ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை உருவாக்கித் தருவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 409 குடும்ப அட்டைகள் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 499 குடும்ப அட்டைகள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், 409 குடும்ப அட்டைகள்தான் எஞ்சியிருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 539 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1,038 பகுதி நேரக் கடைகளும் ஆக மொத்தம் 1,577 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டத்தில் மட்டும் 23 முழு நேர நியாய விலைக் கடைகளும், 27 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன. இதில் திருமங்கலத்தில் முழு நேர நியாய விலைக் கடைகளும், பகுதி நேர நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, வாய்ப்புகள் இருப்பின், ஆய்வுக்குப் பின்னாலே நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

2015 செப்டம்பர் 15]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதிலே உள்ள எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய 409 குடும்ப அட்டைகள் எனத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் பாப்பையாபுரத்திலிருந்து எஸ்.அரசபட்டிக்கும், காவியநாயக்கன்பட்டியிலிருந்து கரையாம்பட்டிக்கும், சாலிச்சந்தையிலிருந்து பி.ஆண்டிபட்டிக்கும், முத்தப்பன்பட்டியிலிருந்து நல்லிதேவன்பட்டிக்கும், இலட்சுமிபுரத்திலிருந்து ராவத்தம்பட்டிக்கும் கல்லிக்குடி ஒன்றியத்தில் பழைய நெடுங்குளத்திலிருந்து நெடுங்குளத்திற்கும், திருமங்கலம் ஒன்றியத்தில் ராயப்பாளையத்திலிருந்து மீனாட்சிபுரத்திற்கும், சாத்தங்குடியிலிருந்து புள்ளமுத்தூர், போல்நாயக்கன்பட்டிக்கும் நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அரசு அதிகாரிகள் மக்களுக்கென்று சேவை செய்துகொண்டிருக்கிற இந்த நல்ல நாளில் பகுதி நேர நியாய விலைக் கடைகளையும் உடனடியாக அமைத்துக் கொடுத்தால், மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டே நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் இருக்கிற மற்ற மாநிலங்களில் எல்லாம் ஓர் அங்காடியோடு சராசரியாக 900 குடும்ப அட்டைகள் வரை இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகிற தமிழகத்திலே மட்டும்தான் ஓர் அங்காடியோடு 585 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கின்றன. என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களில் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு

தனியாருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் தனியாருக்கு அங்காடி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. 25,421 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 8,857 பகுதி நேர நியாய விலைக் கடைகள் என மொத்தம் 34,278 நியாய விலைக் கடைகள் அனைத்தையும் தமிழக அரசே ஏற்று நடத்துகிறது. இதிலே நிதிச் சுமை, நடைமுறைச் சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

265—

குளிர்சாதனப் பேருந்து

***44395—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படுக்கை வசதியுடன் கூடிய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்தை இயக்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*